# திராவிட நாயகர் வழிகாட்டுதலில் நாடாளுமன்றத்தில் பா.ஜ.க.வை அம்பலப்படுத்திய கழகத்தின் Cups & Saucers!



**கோவி லெனின்**
கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

**கா**ஷ்மீர் பெஹல்காமில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவி, அப்பாவி இந்திய சுற்றுலாப் பயணிகளை சுட்டுக்கொன்றதற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசின் உள்துறை பாதுகாப்பு முற்றிலும் செயலிழந்ததே காரணம் என்பதை மறைக்கும் வகையிலும், இந்திய முப்படையினர் பாகிஸ்தான் மீது நடத்திய திறமைமிகு தாக்குதலுக்கு தனது லேபிளை ஒட்டிக் கொள்வதற்காகவும் ‘ஆபரேஷன் சிந்தூர்’ என்ற ராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட மோடி அரசின் மோசடித்தனத்தை நாடாளுமன்றத்தில்எதிர்க்கட்சிகள்கிழித்து தொங்கவிட்டுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி முன்வைத்த வாதங்களில் அனல் பறந்தது. பிரதமர் மோடிக்கு எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் ஒரு சவால் விட்டார். தைரியமிருந்தால் அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் பெயரைச் சொல்லி, அவர்தான் இந்தப் போரை நிறுத்தினார் என்று சொல்வதற்கு மறுப்பு தெரிவிக்க முடியுமா என்று கேட்டார். 56 இஞ்ச் மார்பளவு கொண்ட பிரதமர் தனது உரையில் கடைசி வரை டிரம்ப்பின் பெயரைச் சொல்லவில்லை.

**ராகுல் பேசுவதற்கு முன்பே தி.மு.க.வின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி அவர்கள் பெஹல்காம் தீவிரவாதிகள் தாக்குதலிலும், ஆபரேஷன் சிந்தூரிலும் மோடி அரசின் இரட்டை வேடத்தைப் பிரித்து மேய்ந்தார். இத்தனைக்கும் இந்தியாவின் வெளிநாட்டு உறவைப் பாதுகாப்பதற்காக ரஷ்யா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றவர் அவர். அந்த நாடுகளின் கருத்துகளையும் அவர் அறிந்திருந்ததால், அப்பாவி சுற்றுலாப் பயணிகள் காஷ்மீரில் கொல்லப்பட்டதற்கும் அதற்கு முன்பாக நடைபெற்றுள்ள தாக்குதல்களுக்கும் ஆளுங்கட்சிப் பொறுப்பேற்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.**

பா.ஜ.க. சார்பில் பேசிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங், ராணுவ வலிமை பற்றிப் பேசினாரேயன்றி, இந்திய சுற்றுலாப் பயணிகளுக்குப் பாதுகாப்பு இல்லாமல் போனதற்கு யார் காரணம் என்பதைச் சொல்லவில்லை. சொன்னால் என்ன நடக்கும் என்று அவருக்குத் தெரியாதா? மோடி முதல்வராக இருந்த குஜராத்தில் முஸ்லிம்களை குறிவைத்துக் கொன்றபோது, அந்தக் கொடூரத்தை அம்பலப்படுத்திய காவல்துறை உயரதிகாரிகள் முதல் பலரின் நிலையும் என்னவானது என்பதும், அப்போது குஜராத்தில் வலிமையான அமைச்சராக இருந்தவர் இன்றைய உள்துறை அமைச்சர் அமித்ஷாதான் என்பதும் அவரது மனக் கண்ணில் நிழலாடியிருக்கும் அல்லவா?

**உள்துறை அமைச்சரான அமித்ஷாதான் ஜம்முகாஷ்மீரின் மாநில அந்தஸ்தைப் பறித்து, அதைப் பாண்டிச்சேரி போல யூனியன் பிரதேசமாக்கியவர். அதன் பாதுகாப்புக்கு அவர்தான் பொறுப்பு. அவரோ நேருதான் காரணம், இந்திராகாந்திதான் காரணம், மன்மோகன்சிங்தான் காரணம், காங்கிரஸ் ஆட்சிதான் காரணம், ப.சிதம்பரம்தான் காரணம் என்று வாயளந்து கொண்டே இருந்தாரே தவிர, தன்னுடைய பொறுப்பில் உள்துறை இருக்கும்போது பாகிஸ்தான் தீவிரவாதிகள் எப்படி ஊடுருவினார்கள் என்பதைப் பற்றி வாய் திறக்கவில்லை. தன் தவறை அடுத்தவர் மீது பழி போடுவதுதானே பா.ஜ.க.வின் பாணி.**

இதை நாடாளுமன்றத்தில் அனல் பறக்க அம்பலப்படுத்தியவர் தி.மு.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா அவர்கள். “பா.ஜ.க. தரப்பில் பேசியவர்களிடம் சத்தம் இருந்ததே தவிர, சாரம் இல்லை. எதற்கெடுத்தாலும் நேரு, இந்திராகாந்தி, காங்கிரஸ் என்று பழிபோடும் பா.ஜ.க.வின் செயல்பாடுகள் தேசத்தின் அவமானமாக இருக்கிறது. 1962ல் சீனாவுடனான போரின்போது இந்தியாவுக்கு ஏற்பட்ட நிலைமைகளுக்குப் பொறுப்பேற்று, நாடாளுமன்றத்தில் அதை வெளிப்படையாகத் தெரிவித்தவர் நேரு. ஆனால், காஷ்மீரில் சுற்றுலாப் பயணிகள் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு ஆளுங்கட்சியான பா.ஜ.க.வில் உள்ள பிரதமர், உள்துறை அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்ட யாரேனும் ஒருவராவது தங்கள் உரையில் பொறுப்பேற்றுக் கொண்டார்களா?

**பா.ஜ.க. அரசின் உளவுத்துறை தோல்வியும் வெளியுறவுத் துறையின் தோல்வியும் அப்பட்டமாக வெளிப்பட்டுவிட்டது. பாகிஸ்தானின் தீவிரவாத நடவடிக்கைக்கு ஜி20, ஜி7, பிரிக்ஸ், போன்ற உலக நாடுகளின் அமைப்புகளில் ஒன்று கூட கண்டனம் தெரிவிக்கவில்லையே? இது நிர்வாகத் திறனற்ற அரசு என்பதைத்தானே காட்டுகிறது எனக் கடுமையாக விமர்சித்தார் ஆ.ராசா.**

**விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி.யும் சுற்றுலாப்பயணிகளின் பாதுகாப்பில் ஏற்பட்ட தோல்வியை சுட்டிக்காட்டி, காஷ்மீருக்கு மீண்டும் மாநில அந்தஸ்து வழங்கவேண்டும் எனபதை வலியுறுத்தினார். அவையில் பா.ஜ.க. அரசை பொளந்து கட்டினார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்.பி. சு.வெங்கடேசன்.**

காங்கிரஸ் கட்சி எம்.பி. பிரியங்கா காந்தி, “பெஹல்காமில் 25 இந்தியர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்” என்றதும், ஆளும் பா.ஜ.க. கட்சி தரப்பிலிருந்து, “25 இந்துக்கள்” எனக் குரல் வந்தது. பிரியங்கா மீண்டும், “25 இந்தியர்கள்” என அழுத்தமாகச் சொன்னபோது அவையில் மேசையை தட்டும் ஓசை பலமாகக் கேட்டது. சுற்றுலாப் பயணிகளைப் பாதுகாக்க பா.ஜ.க. அரசு எந்த பாதுகாப்பையும் செய்யாத நிலையில், அந்தப் பகுதியில் குதிரை சவாரி மூலம் வாழ்க்கையை நடத்தும் முஸ்லிம்கள்தான் இயன்ற அளவு தீவிரவாதிகளுடன் போராடி, மக்களைக் காத்து, தங்கள் உயிரையும் கொடுத்தார்கள் என்பதைத் திட்டமிட்டு மறைக்கப் பார்த்த ஒன்றிய ஆளுங்கட்சியை வார்த்தைகளால் வெளுத்துவிட்டார் பிரியங்கா.

இவையனைத்தும் மக்களவையில் நடந்த விவாதங்கள். நாடாளுமன்ற மக்களவையும், மாநிலங்களின் சட்டமன்றப் பேரவையும் அனல் பறக்கும் இடங்கள். அதே நேரத்தில், நாடாளுமன்றத்தில் மாநிலங்களவையிலும் சட்டமன்ற மேலவையிலும் கொதிநிலை குறைந்திருக்கும். ஆனாலும், பதமான சூடு ஆறாத தேநீர் போன்றவை. (புகழ்பெற்ற தமிழ்நாடு சட்ட மேலவையில் தன் திரைப்பட நாயகி வெண்ணிற ஆடை நிர்மலாவை எம்.எல்.சி.யாக்க முடியவில்லை என்பதால் மேலவையை ஒட்டுமொத்தமாக கலைத்துவிட்டார் அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். என்பது தனிக்குறிப்பு)

**நாடாளுமன்ற மாநிலங்களவையில், பெஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர் ஆகியவற்றின் மீதான விவாதங்களில் தி.மு.க.வின் மாநிலங்களவைக் குழுத் தலைவர் திருச்சி சிவா எம்.பி. அவர்கள் முன்வைத்த வாதங்கள், ‘மூத்தோர் அவை’ என்று மாநிலங்களவையை சொல்லுவதற்கேற்ப அமைந்திருந்தது. ஆளுங்கட்சியான பா.ஜ.க. வுக்குப் பொறுப்பேற்கும் தன்மை இருக்க வேண்டும் என்பதையும், மோடி அரசுக்குப் பொறுப்புணர்வுமில்லை, பா.ஜ.க. ஆட்சியில் நாடாளுமன்ற ஜனநாயகமும் இல்லை என்பதை வலுவான வாதங்களுடன் முன்வைத்தார் திருச்சி சிவா எம்.பி.**

பிரதமர் மன்மோகன்சிங் பதவி வகித்து 11 ஆண்டுகள் கடந்துவிட்டது. இன்னமும் முந்தைய ஆட்சியாளர்கள் மீது பழி சுமத்தியே காலம் தள்ளும் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசின் பொறுப்பற்றத்தனத்தை சுட்டிக்காட்டிய திருச்சி சிவா எம்.பி., “அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பராக் ஒபாமா பதவியேற்றபோது, அந்நாட்டின் பொருளாதாரப் பாதிப்புக்கு முந்தைய அரசு மீது குற்றம் சாட்டவில்லை. அமெரிக்காவின் அனைத்து மக்களுக்கும், தான்தான் ஜனாதிபதி என்பதால் பொருளாதாரத்தை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்வேன் என்றும், அமெரிக்கர்கள் தாங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு டாலரையும் தேவையறிந்து பயன்படுத்த வேண்டும் என்றும்தான் ஒபாமா சொன்னார்” என்பதை பா.ஜ.க. ஆட்சியாளர்களின் நடுமண்டையில் ஓங்கிக் குட்டுகிற பாணியில் நறுக்கென்று சொன்னார்.

“நினைவில் கொள்ளுங்கள். பா.ஜ.க. அரசு முன்பு போல தனி மெஜாரிட்டியுடன் சொந்தக் காலில் நடைபோடவில்லை. இரண்டு ஊன்றுகோல்களுடன் நடக்கிறது. இரண்டில் ஒரு ஊன்றுகோல் குறைந்தாலும் நடை தளர்ந்துவிடும்” என்று அவர் சொன்ன உவமை, நாடாளுமன்றத்தின் மேலவையான மாநிலங்களவையின் மாண்பைக் காட்டக்கூடியதாக அமைந்தது.

**பேறிஞர் அண்ணா சட்டமன்றப் பேரவையையும் மேலவையையும் கப் அண்ட் சாசர் என்று ஒப்பிடுவார். பேரவையில் கொதிநிலையுடன் நடைபெறும் விவாதங்கள் கப்பில் உள்ள தேநீர் போல உஷ்ணமாக இருக்கும். பேரவையில் பக்குவத்துடன் நடைபெறும் விவாதங்கள் சாசரில் ஊற்றிய தேநீர் போல, கொதிநிலை சற்றுத் தணிந்த நிலையில், சுவை கொஞ்சமும் குறையாமல் அதே மணத்துடன் இருக்கும் என்பதுதான் அண்ணா சொன்ன உவமை.**

சட்டமன்றப் பேரவைமேலவைக்கு அண்ணா சொன்ன உவமை, நாடாளுமன்ற மக்களவை மாநிலங்களவைக்கும் பொருந்தும்.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடருக்கு முன்பாக கழக எம்.பி.க்களின் ஆலோசனைக் கூட்டம் கழக தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்கள் தலைமையில் ஜூலை 18 ஆம் நாள் அன்று நடைபெற்றது. கழக உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மாநில உரிமைக்காகவும் நாட்டின் நலன் கருதியும் எப்படி செயல்பட வேண்டும் என்ற வழிகாட்டுதலை கழகத் தலைவர் வழங்கி இருந்தார். அதன்படியே, நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் செயலாற்றுகின்ற தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சிகளின் எம்.பி.க்கள் பேரறிஞர் அண்ணா சொன்ன உவமை போல வலிமையான Cups and Saucers.

### சங்கரன்கோவிலில் – பொருநை – பொதிகை இலக்கிய வட்டக் கூட்டத்தில்

# கவிஞர் கலாப்பிரியா 75- வது ஆண்டு பவளவிழா!

## கழக கல்வியாளர் அணிச் செயலாளர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. பங்கேற்று வாழ்த்துரை!




தென்காசி, ஜுலை 31 – சங்கரன்கோவிலில் பொருநை பொதிகை இலக்கிய வட்ட கூட்டத்தில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும்,மாநில கல்வியாளர் அணி செயலாளருமான தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்றுப் பேசினார். தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ராஜபாளையம் சாலையில் உள்ள கிருஷ்ணா மஹாலில் பொருநை பொதிகை இலக்கிய வட்டம் சார்பில் கவிஞர் கலாப்ரியா அவர்களின் 75 ஆவது பவளவிழாவையொட்டி இலக்கிய நிகழ்வு (27–07–25 ஞாயிற்றுக்கிழமை) அன்று கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், மாநில கல்வியாளர் அணி செயலாளர் தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்று புதிய நூல்கள் மற்றும் கவிஞர் கலாப்ரியா 75 ஆவணப்படத்தை வெளியிட்டு பேசியதாவது. ஒரு புன்னகையோடு, ஒரு ரொட்டியைப் பிசைகின்ற லாவகத்தோடு,ஒரு மல்லிகைப் பூவை மிக மகிழ்ச்சியோடு கையில் ஏந்துகிற ஒரு மலர்களோடு தொடங்கி எழுதுகிறவர் கவிஞர் கலாப்ரியா, திருநெல்வேலி தாமிரபரணி ஆற்றங்கரையில் புது மைப்பித்தன் பிறந்து வளர்ந்த பேராச்சியம்மன் கோயில் படித்துறை இருக்கிறது.

புதுமைப்பித்தனின் சாமியாரும் குழந்தையும் சீடையும் காதலில் கதையில் குளிப்பாட்டப்படும் பெண் குழந்தையை போல கலாப்ரியாவின் பாதங்களை நனைத்த நினைவுகள் தான் தாமிரபரணி இன்னும் ஓடிக் கொண்டிருக்கின்றது.

வாழ்வில் நாம் எப்போதும் கடந்து வந்த தருணங்களை ஒற்றை வரியின் மூலம் அல்லது ஒற்றைச் சொல்லின் மூலம் நிகழ்த்தி காட்டுகின்ற அவருடைய அந்த சாகசமான கவிதை விரலுக்கு அதை நான் எப்பொழுதும் பற்றி கூறுகின்ற பெருமையோடு, அந்த கவிதை விரலுக்கு நான் என்னுடைய அன்பான ஒரு முத்தத்தை தருகின்றேன்.

கவிதை என்பது கவிஞனால் எழுதப்படுவது. கவித்தன்மை வாய்த்தவன் எவனோ அவனே கவிஞன் என்று தேவன் சொல்லியிருப்பார். ஜ்ராசிக் படத்திலிருந்து ஒரு அழகிய காட்சி வரும் நாயகன் நாயகனின் புறங்கையில் ஒரு சொட்டு நீரை விடுவான்,அது ததும்பை கொண்டே இருக்க இப்பொழுது அது எந்த பக்கம் வழியும் என்று கேட்பார். நாயகியோட பதில் என்ன அதை எப்படி சொல்ல முடியும் அதன் திசை வலி இயற்கையின் கையில் அல்லவா இருக்கிறது என்பார்கள்.அந்த நீச்சொத்து போல தான் கவித்த நிலை வழியே எனும் கவிதையும் அதன் திசை வெளியை உயிரோட்டம் கொண்ட இந்த வாழ்வு தான் தீர்மானிக்க வேண்டுமே அன்றி கவிஞன் அல்ல.எந்தப் புற விஷயம் அல்ல. அந்த வகையிலே கலாப்ரியா இடத்தில் இருந்து ஒரு கவிதை தந்தையாக இன்றளவும் அன்பு பாராட்டுகிறார்.தமிழ் இலக்கிய பரப்பில் ஒரு மிக முக்கியமாக கூர்ந்து கவனிக்க கூடிய அடுத்த தலைமுறை எடுத்துச் சென்று கொண்டாடப்பட வேண்டிய கவிஞர்.என்றைக்கும் வசீகரமான அன்பின் வெளிப்பாடாகவே, கவிதைகள் ஒன்று,தன்னுடைய வாழ்க்கை வேறு என்று இருப்பவர் அல்ல அவர்.எப்பொழுதுமே அன்றிலிருந்து இன்றுவரை கிட்டத்தட்ட அந்த காலம் முதற்கொண்டு 25 ஆண்டு காலமும் அதே கனிவான பேச்சு.அதே சமமான ஒரு மனநிலை.நிதானமான உரையாடல். இவை எல்லாவற்றையும் விட உலக இலக்கியங்களை மிகக் குறிப்பாக மேலைநாட்டு இலக்கியங்களை கூர்மையாக அவதானித்து அதில் ஆழங்கால் பட்ட பரிட்சயத்தை கொண்டவர்.

கல்யாண்ஜியையும், கலாப்ரியாவையும் என்னால் எப்பொழுதும் பிரித்துப் பார்க்கவே முடியாது. இந்த இரண்டு ஆளுமைகளும்,குறிப்பாக தமிழ் இலக்கிய உலகிற்கு இவர்கள் அளவிற்கு அறிமுகப்படுத்தி யவர்கள் யாரும் இல்லை.அண்ணாவை உலகெங்கும் எத்தனையோ தம்பிகள் நேசித்தார்கள. இன்னமும் நேசிக்கின்றோம்.ஆனால் அவருடைய நேசிப்பு என்பது தனித்துவமானது,அவர் தன்னுடைய அந்த திராவிட இயக்க பற்றையும், அதன் மீதான ஈர்ப்பையும், கலைஞர் மீதான தனி கவனமான ஈர்ப்பையும் என்றென்றைக்கும் மறைத்ததே கிடையாது.எந்த இடத்திலும் அவர் தன்னை தன்னுடைய ஊற்று,தன்னுடைய ஆரம்ப புள்ளி என்பது திராவிட இயக்கம் தான் என்பதை மறைத்ததில்லை. அதை சொல்லப்போனால் மிகுந்த பெருமையோடு பல இடங்களிலே பதிவு செய்தவர் அவர்.

நுண்ணுணர்வு தன்விசாரங்களும் புத்தம் புதிய தொனியும் கொண்டதிலும் அறிவிப்போடு நவீன கவிதைகள் எழுதப்பட்ட கால கட்டத்தில்,கோடைமழை தருவதற்கும் வெள்ளை வீட்டு ஓட்டுக் கூரையில் ஓங்காரம் போல உள்முக தேடலும் புறக்காட்சிகளின் மீது அவதானிப்பும் நிறைந்த தினசரி நிகழ்வு களே கலாப்ரியாவின் கவிதைகளுக்கு உள்ளடக்கம்.அவருடைய வரவு நவீன கவிதையை மறுவறை செய்தது.அதன் பின்பு இவரில் தொடங்கி பல கவிஞர்களுக்கு புதிய திசைகள் புலப்படத் தொடங்கின.ஊர்கூடி தேர் இழுக்கின்ற விழா தான் இந்த விழா.ஒரு தேரை இழுத்து வருவது பெரிதல்ல. அந்த தேரை எந்த இடத்தில் எங்கே சரியாக நிறுத்த வேண்டும் என்பது மிக முக்கியம்.அதுபோலத்தான் ஒரு கவிதையை நீங்கள் எந்த இடத்திலே சரியாக நிறுத்த வேண்டும் என்று தெரிந்திருக்க வேண்டும்.அப்பொழுது தான் நீங்கள் ஒரு மிகச் சரியான கவிதையை, சிறந்த ஒரு படைப் பைக் கொண்டு வர இயலும் என்று பதிவு செய்கிறார். அதேபோலத்தான் கவிதை என்பது அத்தனை மொழிகளின் அரசி. மிகுந்த சவாலுக்கு உரிய ஒரு வடிவம். சிறுகதையில் உங்களுக்கு கொடுக்கப் பட்டிருக்கின்ற ஒரு இடம் ஓரள வுக்கு உங்களை நீங்கள் சரியாக விவரிக்க சொல்ல வாய்ப்பு இருக்கின்ற இடம் மிகப்பெரியது.கவிதை எந்த வடிவத்திலே எழுதப்பட வேண்டும் என்பதை அந்த கனம் உங்களுடைய பேனா, அந்த நொடிதான் தீர்மானி க்கும். மொழியின் போதாமையை உணர்த்துகின்ற ஒரு வடிவத்தை எடுத்து தொடர்ச்சியாக அதிலே இயங்கி வருகின்ற என்னை போன்ற எழுத்தாளர்களுக்கு எல்லாம் ஒரு மிகப்பெரிய உந்து சக்தியாக இருக்கின்றார் கலாப்ரியா என்றார்.

இவ்வாறு தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி.பேசினார்.

இதனை தொடர்ந்து பக்ருளி சிறப்புதழ் உள்ளிட்ட 5 நூல்கள் வெளியிடப்பட்டன.

இதனை எழுத்தாளர் வண்ணதாசன், ஓவியர் சந்துரு ஆகியோர் வெளியிட்டனர்.அவற்றை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ மருத்துவர் வி. எஸ்.சுப்ப ராஜ், மகாலிங்கம்,சுதீர் செந்தில் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

பின்னர் படைப் பரங்கத்தின் 3 அமர்வுகளிலும் எழுத் தாளர்கள் ச. தமிழ்செ ல்வன், விக்கிர மாதித்தியன், க.உதயசங்கர், ஆதவன் தீட்சண்யா, அ.ராம சாமி, சாம்ராஜ், பாவண்ணன்,க.உதய சங்கர், ந.முரு கேசபாண்டி யன், சா.தேவதாஸ்,கவிஞர்.தேவேந்திரபூபதி, போகன்சங்கர், லிபி ஆரண்யா ஆகியோர் பேசினர்.

குழுவிவாதம் மற்றும் கலந்துரையாடல் நிகழ்வில் கிருஷி, கோணங்கி,கீரனூர்ஜாகீர்ராஜா, பத்மஜா நாராயணன், யவனிகர்ரீராம், நந்தன்கனகராஜ், பேராசிரியர் நவீனா சுகா, கவிஞர். முருகேஷ், திரைக்கலைஞர் ரோகினி உள்ளிட்ட பலர் பங்கேற்றுப் பேசினர்.

நிகழ்ச்சி நிறைவில் கவிஞர். கலாப்ரியா ஏற்புரையாற்றினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பொருநை பொதிகை வாசகர் வட்ட ஒருங்கிணைப்பாளர் சோ. அகிலாண்டபாரதி, சோ. தெய்வநாயகி,ந.செந்தில்வேல், மு.செல்வின், மு.ஈஸ்வரமூர்த்தி மற்றும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தினர் செய்திருந்தனர்.

கவிஞர் கலாப்ரியா 2017ல் தமிழக அரசின் கலை மாமணி விருது, கலைஞர் பொற்கிழி விருது பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# நினைவின் தீஞ்சுடர்!



(விருதுநகர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மேனாள் செயலாளரும், மேனாள் அமைச்சருமான மறைந்த வே.தங்கபாண்டியன் அவர்களின் இருபத்தி 28 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி (31.07.2025) அவரது மகள் தமிழச்சி தங்கபாண்டியன் எழுதியுள்ள கவிதாஞ்சலி)

**அ**ந்தியின் மெல்லிருளில் அந்திமத்தின்
புதிரைப் போர்த்திய
கருநாவற் பழமொன்றைக் கண்டெடுத்தேன்.
அப்பாவிற்குப் பிடித்த அதன் துவர்ப்பின் ருசியுடன்
அவரெனை அழைக்கும் அன்பொலி
மெதுவாய் எழும்பும் நட்சத்திர மினுங்கலில் ஒளிர்கிறது !
அவரின் நள்ளிரவு உறக்கத்திற்கான
ஆயத்தங்களை நினைவு கூர்ந்திருக்கும் திரைச்சீலைகள்
தொடுதலின் கதகதப்பின்றிக் குளிர்ந்திருக்கின்றன.
சன்னலோரம் உதிர்ந்த சருகொன்று
கனிந்த முதிர்வின் பிரியாவிடையைக்
கையருகே கடத்துகின்றது.
அப்பாவின் உள்ளங்கை வெதும்பலை
ஒற்றி எடுத்த நைந்த கைக்குட்டை
கண்ணீர்த் தடங்களுடன் பதுக்கிய
அவரின் பெருஞ்சிரிப்பு சுமந்து சுகித்திருந்தது.

குறுமணலூறும் நண்டெனக் குடையும்
அவரது நினைவின் தீஞ்சுடர்
அசைந்தும் ஒசிந்தும் நடுநெற்றியில் தகிக்கின்றது.
அழுகையமர்ந்த சிறுகுழந்தையெனத்
தண்ணிலவு தளர்ந்திருக்கின்றது.
அப்பாவின் அசதியான குரலுக்கு
உடன் செவிமெடுக்கும் அம்மாவின்
பதிலை எதிரொலித்தபடி
மௌனித்திருக்கும் படிக்கட்டுகளில்
ஏறுகிறேனா ? இறங்குகிறேனா ?
வாழ்வெனும் பெருங்கருணை அப்பத்தை
அகால மரணத்திற்கு
உண்ணக் கொடுத்த பிச்சியெனத் தனித்திருக்கிறேன்.
நிகழ் கணம் கடந்து
வரும் நொடி திறக்கும்
மாயக்கதவின் மறுபுறம்
விடியலின் மந்திரச் சாவியுடன்
அப்பா அழைப்பு மணியடிக்கிறார் !
காலக் கணக்கற்ற பெருவெளியில்
மகளெனும் சிறு துகள் இலக்கை அறிந்து
வானிறங்கும் வால் நட்சத்திரம்
அப்பாக்கள் மட்டும் தானே !



**கவிஞர்
தமிழச்சி தங்கபாண்டியன்**